**OS. No. 6 /2022**

P.W.1 - **அஞ்சனா**

தேதி: 25.09.2023

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொடுத்த முன்பணம் ரூ.7,00,000/—த்திற்கு வட்டியும் சேர்த்து வழக்கு போட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகும். அந்த ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் ரூ.43,80,000/—த்திற்கு ஏற்படுத்தப்பட்டது. நான் கிரையம் வாங்குவதற்காக ஒப்பந்தம் போட்ட சொத்து வங்கியின் அடமானத்தில் இருந்தது. அதற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் ஒரு பதிவு செய்துள்ள கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் அவருடைய சொத்து குறித்து 2ம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விவரம் தெரிந்து தான் 2ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தின் படி ஏன் கிரைய பத்திரம் பதிவு செய்யவில்லை என்றால் நாங்கள் அழைத்தபோது 1ம் பிரதிவாதி பதிவு செய்து தருவதற்கு முன்வரவில்லை. என்னுடைய கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யமுடியாததால் நான் கோரியுள்ள பற்றுகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கூட்டாக தயார் செய்த ஒப்பந்தம் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் பிரதிவாதி அனுப்பிய வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்புக்குரிய அஞ்சல் உறையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து பொய்யாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH